பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**16 12 2025** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஜோர்டானுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

**2.** குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கர்நாடகா, தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் 7 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

**3.** நாட்டின் ஏற்றுமதி கடந்த மாதம் 38 புள்ளி ஒன்று மூன்று பில்லியன் டாலர் அளவிற்கு உயர்ந்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**4.** யுக்ரைனுக்கான பாதுகாப்பை அமெரிக்கா வழங்க தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5.** உலகக் கோப்பை ரோல் பால் போட்டியில் இந்தியா ஆடவர் பிரிவில் பிரேசிலையும், மகளிர் பிரிவில் சவுதி அரேபியாவையும் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜோர்டான் மன்னர் திரு. அப்துல்லா பின் அல்-ஹுசைனை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக விவாதித்தார்.

ஜோர்டான் தலைநகர் அம்மானில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, தீவிரவாதத்திற்கு எதிராக ஜோர்டான் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா எடுத்து வரும் நடவடிக்கை குறித்து ஜோர்டான் மன்னர் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே 75 ஆண்டுகால வர்த்தகம் தொடர்பான உறவுகள் கொண்டாடப்படும் வேளையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த சந்திப்பின்போது வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு தளவாடங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வேளாண்மை, தகவல் தொழில்நுட்பம், மின்னணு தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் மருந்தியல் துறை, கல்வி, சுற்றுலா, இரு நாட்டு மக்களிடையேயான உறவு குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தைகளுக்குப் பின் இரு நாடுகளுக்கு இடையே அடுத்த 5 ஆண்டுகளில் 5 பில்லியன் டாலர் அளவிற்கு வர்த்தக

தொடர்புகள் அதிகரிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

கலாச்சாரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர் மேலாண்மை, மின்னணு தொழில்நுட்ப கட்டமைப்பு உள்ளிட்ட 5 முக்கிய ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

ஜோர்டானில் இருந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி எத்தியோப்பியா தலைநகர் அடிஸ் அபாபா-விற்கு சென்றுள்ளார்.

அந்நாட்டுப் பிரதமர் டாக்டர் அபி அஹமத் அலியை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து அவர் உரையாடுகிறார்.

அதன் பின்னர் எத்தியோப்பியா நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கர்நாடகா, தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் 7 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

இன்று கர்நாடகா செல்லும் அவர் Malavalli-யில் நடைபெறும் ஆதிஜகத் குரு ஸ்ரீ சிவராத்திரீஷ்வர் சிவயோகி மஹா சுவாமியின்

ஆயிரத்து 66வது ஜெயந்தி தினத்தை ஒட்டி நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

நாளை வேலூரில் உள்ள தங்கக் கோயிலுக்கு வருகை தரும் திருமதி திரௌபதி முர்மு, அங்கு தரிசனத்தை முடித்துக்கொண்டு தெலங்கானா மாநிலம் செல்கிறார்.

<<<<>>>>

பணியாளர் நிர்வாகம் நவீனமயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களின் பணியாளர் மற்றும் பொது நிர்வாகத் துறையின் செயலர்கள் பங்கேற்ற வருடாந்திர மாநாட்டில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

கடந்த 10 ஆண்டுகளாக அரசு நிர்வாகத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

தொழில்நுட்ப பயன்பாடுகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் முயற்சிகளுக்கு மாநில அரசுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

இந்திய பொருளாதாரம் உலக அளவில் வேகமாக வளர்ந்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவையின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், உலக பொருளாதாரம் 3 புள்ளி 2 சதவீதம் என்ற அளவில் உள்ளதாகவும், ஆனால் இந்திய பொருளாதாரம் 8 புள்ளி 2 சதவீதம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மேலும் அதிகரிக்கும் என்று உலகின் மிகப்பெரிய பொருளாதார ஆய்வு நிறுவனங்கள் தெரிவித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மின்னணு, மருந்து உற்பத்தி, பாதுகாப்பு, பொறியியல் உபகரணங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவின் ஏற்றுமதி கடந்த மாதம் 38 புள்ளி ஒன்று மூன்று பில்லியன் டாலர் அளவிற்கு உயர்ந்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற ஏற்றுமதி அளவை விட 19 புள்ளி நான்கு சதவீதம் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பொறியியல் மற்றும் மின்னணு உபகரணங்கள், ஆபரணங்கள் மற்றும் ஆபரணக் கற்கள், பெட்ரோலியப் பொருட்கள், மருந்து உற்பத்திப் பொருட்கள் ஆகியவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியா - மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படையினர் இடையே ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் "ஏக்தா" இருதரப்பு கடல்சார் கூட்டுப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்பதற்காக இந்திய கடற்படைத் துணைத்தலைவர் வைஸ் அட்மிரல் தருண் சோப்தி மாலத்தீவு சென்றுள்ளார்.

**2017**ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்கு இடையே இந்தப் பாதுகாப்பு பயிற்சி நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சியில் நீர்மூழ்கிக் கப்பலின் கருவிகளைப் பயன்படுத்துவது, துப்பாக்கி சுடுவது, வெடிபொருட்களைக் கையாள்வது ஆகியவை இந்தப் பயிற்சியில் இடம்பெற்றுள்ளன.

அந்நாட்டு பாதுகாப்புத்துறை தலைமை அதிகாரி திரு. இப்ராஹிம் இல்மி-யை வைஸ் அட்மிரல் சந்தித்து கடல்சார் பாதுகாப்பு பயிற்சி மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான ஒத்துழைப்பு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

<<<<>>>>

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ட்ரோன்களை ராணுவத்தில் பயன்படுத்தவதற்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

தெலங்கானா மாநிலம் செகந்தராபாதில் அமைந்துள்ள பல்வேறு ராணுவ தளவாட நிறுவனங்களுடன் இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் ட்ரோன்கள் இறக்குமதி வெகுவாக குறையும் என்றும், நமது தேவைக்கேற்ற தொழில்நுட்பத்தை இதில் பயன்படுத்த முடியும் என்றும் இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நேபாள் தலைநகர் காத்மாண்டுவில் சுற்றுச்சூழல் பொருளாதாரம் குறித்த 3 நாள் சர்வதேச மாநாடு தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை, பூடான், அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் 7 அமர்வுகளில் சுற்றுச்சூழல், இயற்கை வளம், பொருளாதார வளர்ச்சி ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

ஹிமாலய மலைப்பகுதி மற்றும் தெற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் சவால்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

அரசு உயர் அதிகாரிகள், கொள்கை வரையறையாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

<<<<>>>>

தமிழகத்தில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கு மூன்றாம் கட்ட இறுதி காலியிடங்களுக்கான மாணவர் சேர்க்கை குறித்த அறிவிப்பை

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையரகம் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பித்து முதல் மூன்று கட்ட கலந்தாய்விலும் இடம் கிடைக்காதவர்கள், முதல் இரண்டு கட்ட கலந்தாய்வில் இடம் கிடைத்தும் சேராதவர்கள் மூன்றாம் கட்ட கலந்தாய்வு துவங்கும் முன் இடைநிறுத்தம் செய்தவர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த மேலும் தகவல்களை www.tnhealth.tn.gov.in என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையவழியில் மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

யுக்ரைன் - ரஷ்யா இடையே நடைபெற்று வரும் சண்டையை நிறுத்தும் விதத்திலான அமைதிப் பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக யுக்ரைனுக்கான பாதுகாப்பை அமெரிக்கா வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெர்லினில் யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியை சந்தித்த பின் அமெரிக்க அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் உதவியுடன் யுக்ரைனுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை தாங்களும் ஆதரிப்பதாக ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேட்டோ நாடுகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பைப் போல யுக்ரைனுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டால், நேட்டோ அமைப்பில் சேர்வதில் இருந்து தாம் விலகத் தயார் என்று ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

அதேநேரத்தில் யுக்ரைனின் **Donetsk** பகுதியை ரஷ்யாவிற்கு விட்டுத் தருவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வரும் **2026**ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணம் செல்ல விரும்பும் யாத்ரீகர்கள் அங்கீகாரம் பெற்ற ஹஜ் குழுக்கள் மூலமாக விரைவாக விண்ணப்பிக்குமாறு மத்திய சிறுபான்மை நலத்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

சவுதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பின் அடிப்படையில் கடைசி நேர

இடையூறுகளை தவிர்க்கவும், அனைத்து நடைமுறைகளையும் குறித்த காலத்திற்குள் செய்யவும் வலியுறுத்தியுள்ளது.

அடுத்த மாதம் 15ஆம் தேதிக்குள் முன்பதிவு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் முடிக்க வேண்டும் என்று அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை ரோல் பால் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா 11-2 என்ற கோல் கணக்கில் பிரேசிலை வென்றது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 25-0 என்ற கோல் கணக்கில் சவுதி அரேபியாவை வென்றது.

-------------

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி காலை மணி 10.30க்கு நடைபெறுகிறது.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க உள்ள வீரர்களை தேர்ந்தெடுக்கும் மினி ஏலம் இன்று அபுதாபியில் நடைபெறுகிறது.

இதில் **244** இந்திய வீரர்கள் உட்பட **359** வீரர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

**<<<<The End>>>>**